ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2022 செத்தெம்பர் 01 |

பன்னாட்டு நாணய நிதிய பணிக்குழுவொன்று இலங்கை அதிகாரிகளுடனான பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார சீராக்கல் செயற்றிட்டம் தொடர்பிலான கலந்துரையாடல்களைத் தொடர்வதற்கு 2022 ஓகத்து 24 தொடக்கம் செத்தெம்பர் 1 வரையிலான காலப்பகுதியில் கொழும்பிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தது. பணிக்குழுவானது பின்வரும் ஊடக அறிக்கையினை வெளியிட்டதுடன் அதனைக் கீழுள்ள இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

https://www.imf.org/en/News/Articles/2022/09/01/pr22295-imf-reaches-staff-level-agreement-on-an-extended-fund-facility-arrangement-with-sri-lanka

## "பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்கள் இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் தொடர்புடைய அலுவலர் மட்ட உடன்படிக்கையினை எட்டியுள்ளனர்

- *ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.9 பில்லியன் பெறுமதிகொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான 48 மாதகால உடன்படிக்கையொன்றுடன் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றினை எட்டியுள்ளனர்.*
- *பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையையும் மீட்டெடுக்கும் வேளையில் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாத்தல், ஊழலினால் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை நிவர்த்திசெய்தல், இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொணர்வதற்குக் கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை முன்னெடுத்தல் என்பன இலங்கைக்கான புதிய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாக அமைந்துள்ளன.*
- *படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை நிச்சயப்படுத்தல் மற்றும் நிதியியல் இடைவெளிகளை நிரப்புதல் என்பவற்றிற்குத் துணைபுரிவதற்கு இலங்கையின் கடன்வழங்குநர்களிடமிருந்து படுகடன் நிவாரணமும் பல்புடைப் பங்காளர்களிடமிருந்து மேலதிக நிதியிடலும் அவசியப்படும். இலங்கையின் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களிடமிருந்து படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை மீளமைப்பதற்கான நிதியியல் உத்தரவாதம் மற்றும் தனியார் கடன்வழங்குநர்களுடனான கூட்டு உடன்படிக்கையொன்றினை எட்டுவதற்கான நல்லெண்ண அடிப்படையிலான முயற்சியினை மேற்கொள்ளல் என்பன பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கு நிதியியல் ஆதரவினையளிப்பதற்கு முன்னரான அத்தியாவசியத் தேவைப்பாடுகளாகவுள்ளன.*

**கொழும்பு, இலங்கை – 2022 செத்தெம்பர் 1:** இலங்கைக்கு பன்னாட்டு நாணய நிதிய ஆதரவினையளித்தல் மற்றும் அதிகாரிகளது அனைத்தும் உள்ளடங்கிய பொருளாதார மறுசீரமைப்புச் செயற்றிட்டம் என்பன தொடர்பிலான கலந்துரையாடல்களைத் தொடர்வதற்கு திரு. பீட்டர் பிரூயர் மற்றும் திரு. மசாஹிரோ நொசாகி ஆகியோர் தலைமையிலான பன்னாட்டு நாணய நிதிய பணிக்குழுவொன்று 2022 ஓகத்து 24 தொடக்கம் செத்தெம்பர் 1 வரையிலான காலப்பகுதியில் கொழும்பிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தது.

பணிக்குழு விஜயத்தின் இறுதியில் திரு. பிரூயர் மற்றும் திரு. நொசாகி ஆகியோர் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டனர்:

"சிறப்பு எடுப்பனவு உரிமையின் ஏறத்தாழ 2.2 பில்லியன் பெறுமதிகொண்ட (ஐ.அ.டொலர் 2.9 பில்லியனிற்கு நிகரான) விண்ணப்பிக்கப்பட்ட அணுகலுடனான புதிய 48 மாதகால விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் அதிகாரிகளது பொருளாதார சீராக்கல் மற்றும் மறுசீரமைப்புக் கொள்கைகளுக்கு

ஆதரவளிக்கும் பொருட்டு இலங்கை அதிகாரிகளும் பன்னாட்டு நாணய நிதிய குழுவும் அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றினை எட்டியுள்ளனர்.

"பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையையும் மீட்டெடுக்கும் வேளையில் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், ஊழலினால் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளைக் குறைத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொணர்தல் என்பவற்றினை உள்ளடக்கிய இலங்கையின் செயற்றிட்டத்திற்கு புதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி உடன்படிக்கை ஆதரவளிக்கும். உடன்படிக்கையானது எதிர்வரும் காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதிய முகாமைத்துவத்தினதும் நிறைவேற்றுச் சபையினதும் ஒப்புதலுக்குட்பட்டதுடன் அதிகாரிகளது முற்கூட்டிய நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தல், இலங்கையின் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களிடமிருந்து நிதியியல் உத்தரவாதத்தினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தனியார் கடன்வழங்குநர்களுடனான கூட்டு உடன்படிக்கையொன்றினை எட்டுவதற்கான நல்லெண்ண அடிப்படையிலான முயற்சியினை மேற்கொள்ளல் போன்றவற்றில் தங்கியுள்ளது. இலங்கையின் கடன்வழங்குநர்களிடமிருந்தான படுகடன் நிவாரணமும் பல்புடைப் பங்காளர்களிடமிருந்தான மேலதிக நிதியிடலும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை நிச்சயப்படுத்தல் மற்றும் நிதியியல் இடைவெளிகளை நிரப்புதல் என்பவற்றிற்குத் துணைபுரிய அவசியமாக அமையும்.

"இலங்கை கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. போதியளவிலான வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களின்மை மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையற்ற பொதுப் படுகடன் இயக்கவாற்றல் என்பன காரணமாக பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் அதிகரித்துள்ளன. ஏப்பிறல் மாத படுகடன் சட்ட இசைவுத்தாமதமானது இலங்கை அதன் வெளிநாட்டுக் கடப்பாடுகளை மீளச்செலுத்தத் தவறுவதற்கு வழிவகுத்ததுடன் மிகவும் குறைந்த மட்டத்திலான வெளிநாட்டு ஒதுக்குகள் எரிபொருள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளைத் தடைப்படுத்தியமையானது பொருளாதார நடவடிக்கைகளை மேலும் பாதிப்படையச்செய்துள்ளது. பொருளாதாரமானது 2022இல் 8.7 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் பணவீக்கமானது அண்மையில் 60 சதவீதத்தினை விஞ்சிக் காணப்பட்டது. இதன் தாக்கமானது ஏழைகளினாலும் பாதிப்படையக்கூடியவர்களினாலும் விகிதாசாரமற்ற அடிப்படையில் தாங்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

"இப்பின்னணியில் நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட அதிகாரிகளது செயற்றிட்டம் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்தல், இலங்கை மக்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார மீட்சிக்கான தளத்தினைத் தயார்படுத்தல் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சியினை ஊக்குவித்தல் என்பவற்றினை நோக்காகக்கொண்டுள்ளது.

"செயற்றிட்டத்தின் முக்கிய கூறுகளாவன:

- இறைத்திரட்சிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு அரசிறையை அதிகரித்தல். உலகின் மிகக் குறைந்த அரசிறை மட்டங்களிலிருந்து ஆரம்பித்து செயற்றிட்டமானது பாரியளவிலான வரி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தும். தனிநபர் வருமான வரியை மிகவும் வளர்விகித அடிப்படையில் மாற்றுதல் மற்றும் கம்பனி வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றிற்கான வரித் தளத்தினை விரிவுபடுத்தல் என்பன இம்மறுசீரமைப்புக்களில் உள்ளடங்கியுள்ளன. செயற்றிட்டமானது 2025 ஆண்டளவில் மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீத ஆரம்ப மிகையினை அண்மிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது;

- அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்து எழுகின்ற இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவு மீட்பின் அடிப்படையிலமைந்த விலையிடலினை அறிமுகப்படுத்தல். அதிகாரிகளினால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட கணிசமானளவிலான அரசிறை வழிமுறைகள் மற்றும் வலு விலையிடல் மறுசீரமைப்புக்கள் என்பவற்றினை பணிக்குழு வரவேற்கத்தக்க படிமுறைகளாக நோக்கியது;

- சமூக ரீதியிலான செலவினங்களை உயர்த்துவதன் மூலம் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான தற்போதைய நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளடக்கத்தினையும் இலக்கிடலையும் மேம்படுத்துதல்;

- தரவினால் உந்தப்பட்ட நாணயக் கொள்கை நடவடிக்கை, இறைத் திரட்சி, நாணய நிதியிடலின் நீக்கம் மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த இலக்கிடல் முறைமையினைப் பின்பற்ற அனுமதிக்கின்ற உறுதியான மத்திய வங்கியின் சுயாதீனம் என்பவற்றினூடாக விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுத்தல். புதிய மத்திய வங்கிச் சட்டமொன்று இவ்வுபாயத்தின் அடிப்படையாயமைகின்றது;

- செயற்றிட்டத்தின் கீழான அனைத்துமுள்ளடங்கிய கொள்கைத் தொகுப்பின் ஆதரவுடன் சந்தை நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நெகிழ்வுமிக்க செலாவணி வீதமொன்றினை மீளமைப்பதன் ஊடாக வெளிநாட்டு ஒதுக்குகளை மீள்கட்டியெழுப்புதல்;

- ஆரோக்கியமான மற்றும் போதுமாந்தன்மைகொண்ட மூலதனமயமாக்கப்பட்ட வங்கி முறைமையினை உறுதி செய்வதன் மூலமும் திருத்தப்பட்ட வங்கிச் சட்டத்துடன் நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களை மேம்படுத்துவதன் மூலமும் நிதியியல் உறுதிப்பாட்டினை பாதுகாத்தல்; மற்றும்

- இறை வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நிதி முகாமைத்துவத்தின் மேம்படுத்தல், ஊழலுக்கு எதிரான உறுதியான சட்டக் கட்டமைப்பொன்றின் அறிமுகம் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய தொழில்நுட்ப ஆதரவுடன் ஆழமான ஆளுகைக் கண்டறிதலை மேற்கொள்ளல் என்பவற்றின் ஊடாக ஊழலினால் பாதிப்படையக்கூடிய தன்மையினைக் குறைத்தல்;

''பன்னாட்டு நாணய நிதியப் பணிக்குழு சனாதிபதி மற்றும் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் முனைவர் பீ. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் கே.எம்.மகிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கி முதுநிலை அதிகாரிகள் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களையும் தனியார் துறை, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் என்பவற்றின் பிரதிநிதிகளையும் பணிக்குழு சந்தித்துள்ளது.

''அதிகாரிகளின் நேர்மையான அணுகுமுறை மற்றும் கனிவான விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவிக்க விரும்புவதுடன் இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஆதரவளிக்கும் முகமாக எமது ஈடுபாட்டினைத் தொடர்ந்தும் முன்னெடுக்க ஆவலுடன் இருக்கிறோம்.''